பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி16 வெள்ளிக்கிழமை 28.02.2025 கதிர் 112

## வெளிநாட்டு பயணங்களுக்கு அதிகம் செலவிட்டவர் மகிந்த

### பிரதமர் நேற்று நாடாளுமன்றில் தெரிவிப்பு




2010 முதல் 2014 வரையிலான நான்கு ஆண்டுகளில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது வெளிநாட்டுப் பயணங்களுக்காக முந்நூற்று ஐம்பத்தேழு மில்லியன் ரூபாய்களுக்கு மேல் செலவிட்டார் என்று பிரதமர் ஹரிணி நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

ஒரு நாட்டுத் தலைவர் வெளிநாட்டுப் பயணங்களுக்காகச் செலவிட்ட அதிகபட்ச பணம் இது என்று கூறிய பிரதமர், 2013 ஆம் ஆண்டில் மட்டும் வெளிநாட்டுப் பயணங்களுக்காக 1.14 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமாகச் அவர் செலவிட்டுள்ளார் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி, பிரதமர், ☞ 8

## 'நிதி' என்ற வார்த்தையை பயன்படுத்த வரையறை

### மத்திய வங்கி அறிவிப்பு

நிதி வணிகச் சட்டம் மற்றும் நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்களைத் தவிர வேறுஎந்தநபரும் இலங்கை மத்திய வங்கியின் முன் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமல் 'நிதி' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது என்று இலங்கை மத்திய வங்கி ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

'2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் துணைப்பிரிவு 10(2) இன் படி, ஒரு நிதி நிறுவனம் அல்லது சட்டத்தின் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சித் தேர்தலுக்கான நாள் விரைவில் அறிவிக்கப்படவுள்ள நிலையில், தமது பக்கமே அதிகபேர் அணிதிரட்டிருக்கின்றனர் என்று காட்டுவதற்காக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி செய்த துரோகமும் அவசரமும் இப்போது அவர்களுக்கே ஆப்பாக வந்து முடிந்திருக்கிறது. தேர்தலைச் சேர்ந்து எதிர்கொள்வதறக்காக தமிழ் அரசுக் கட்சி நீட்டிய கையை துரோகத்தின் மூலம் வெட்டிவிட்டு, தம்பக்கம் ☞ 2

## பன்றி வேட்டை தவறியதில் 9 வயதுச் சிறுமி உயிரிழப்பு

குருணாகல், ஹெட்டிபொல - மகுலாகமவில் சிறுமி ஒருவர் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டார். பன்றி வேட்டையின்போது தவறுதலாக சிறுமி மீது குண்டு பாய்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் ஒரு வயோதிபப் பெண்ணும் ஒரு சிறுமியும் படுகாயமடைந்து குளியாப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் சிறுமியின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமி மகுலாகம பகுதியைச் சேர்ந்த, 9 வயதானவர். அவர் தனது பாட்டியுடன் வீட்டில் தங்கியிருந்தபோது, அருகிலிருந்த சிலர் பன்றிகளை வேட்டையாடும் சத்தம்கேட்டு, வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தபோது அவர் மீது ☞ 2

## பயங்கரவாத தடைச் சட்டம் விரைவிலேயே நீக்கப்படும்

### அமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு

வெகுவிரைவில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும். தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் - என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு - ☞ 8

## உத்தரவு

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.24.5 மில்லியன் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் அறிவிப்பைக் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்த விரிவான அறிக்கையை பேராயர் கர்தினால் மால்கம் ரஞ்சித்திடம் வழங்குமாறு சட்டமா அதிபருக்கு உச்ச நீதிமன்றம் ☞ 8 இன்று உத்தரவிட்டது.

# புதிய அரசமைப்பு வருமா வராதா?

## வந்தால் உள்ளடக்கம் என்ன என சபையில் சாணக்கியன் கேள்வி



வடக்கு மக்கள் புதிய அரசமைப்பில் தமக்கான அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்கின்றனர். அதுபற்றி நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்? அதிகாரப் பகிர்வை விடுவோம். புதிய அரசமைப்பு வருமா வராதா? வந்தால் அதன் உள்ளடக்கம் என்ன? என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வரவு - செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## கைதுசெய்யப்பட்ட இருவருக்கும் விளக்கமறியல்

கெஹெல்பத்தரபத்மே என்ற குற்றவியல் கும்பலின் உறுப்பினரின் மனைவியின் வீட்டில் புகைப்படம் எடுத்ததாகக் கூறப்படும் இரண்டு சந்தேகநபர்களையும் மார்ச் 6 வரை விளக்கமறியலில் வைக்க குளியாப்பிட்டி நீதிவான் ரந்திக லக்மல் ஜெயலத் உத்தரவிட்டார்.

பன்னால பொலிஸாரால் பெப்ரவரி 25 நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 48 மணி நேர தடுப்புக் காவல் உத்தரவு காலாவதியானதை அடுத்து, சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கொட்டாரமுல்ல மற்றும் கிரிமெட்டியவைச் சேர்ந்த நிர்மல் ராஜபக்ஷ மற்றும் சிஜ தில்ஷான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதாள உலகக் குழுத் தலைவர் கணேமுல்லசஞ்சீவவை நீதிமன்றத்திற்குள் வைத்துக் கொலை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் கெஹெல்பத்தர பத்மே என்று நம்பப்படும் நிலையில் ☞ 2

## குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தைகூட இல்லை

### வெளிவிவகார அமைச்சரின் ஜெனிவா உரை குறித்து கஜேந்திரகுமார் நாடாளுமன்றில் காட்டமான உரை

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மற்றும் நல்லிணக்க அலுவலகம் வலுப்படுத்தப்படும் என்றும், போர்க்களத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் ☞ 2

### நாடாளுமன்றத்தில்

## துன்புறுத்தல் குற்றச்சாட்டை விசாரிக்க இரண்டாவது குழு

நாடாளுமன்றத்தினுள் பணியாற்றும் பெண் ஊழியர் ஒருவர் துன்புறுத்தப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் சட்டத்தரணி குஷானி ரோஹணதீர நேற்று இரண்டாவது குழுவை நியமித்தார்.

இந்தக் குற்றச்சாட்டை விஷயத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட முதல் குழு பாதிக்கப்பட்டவரின் எதிர்ப்புக் காரணமாக பாதியிலேயே நிறுத்தப்பட்டது. அதையடுத்தே நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் இந்தப் புதிய குழுவை நியமித்துள்ளார்.

இந்தப் புதிய குழுவிற்கு ☞ 8

## கொழும்பில் தமிழ் அரசு உள்ளாட்சித் தேர்தலில்

### வேட்பாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

வரவுள்ள உள்ளுராட்சி தேர்தலின்போது கொழும்பிலுள்ள தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழ் அரசுக் கட்சி கொழும்பு மாநகரசபையில் போட்டியிடவுள்ளது.

இதற்கான தீர்மானம் கட்சியின் மத்திய செயற்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளைத் தலைவர் இரத்தினவடிவேல் ☞ 8

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்க பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பேச்சு

ஜனாதிபதி அநுரகுமாரவிற்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் மருத்துவர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் மருத்துவர்கள் தங்கள் தொழில்முறை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்தஜயதிஸ்ஸ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சஞ்சீவதென்னகோன், செயலாளர் பிரபாத் சுகததாச மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

9 கட்சிகள் இருக்கின்றன என்று அவசரமாக அறிவித்தார்கள்.

அந்த 9 கட்சிக் கூட்டு அறிவித்த அன்றே பிசுபிசுத்துப் போய்விட்டது. அதன் பின்னர் புதன்கிழமை மீண்டும் நடந்த கூட்டத்தில் கூட்டு 8 கட்சிகளாகச் சுருங்கியது. ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இந்தக் கூட்டிலிருந்து வெளியேறியது. தமக்கு விடுக்கப்பட்ட அழைப்புக்கு ஏற்ப கூட்டத்தில் கலந்துகொண்டதே தவிர, சங்குச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட தாம் ஒருபோதும் சம்மதிக்கவில்லை என்று கூறிய அந்தக் கட்சி, புதன்கிழமைக் கூட்டத்திற்கு வருகை தரவில்லை. முன்னாள் ஈபிடிபி உறுப்பினரான சந்திரகுமார் அங்கம் வகிக்கக்கக்கூடிய ஒரு கூட்டணியில் தாம் இருக்க முடியாது என்பதும் சங்குச் சின்னம் துரோகத்தின் மூலம் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பிடமிருந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியால் உருவப்பட்டது என்றும் கருதும் ஐங்கரநேசன் தரப்பு இந்தக் கூட்டிலிருந்து முதலாவதாக வெளியேறியது.

அதேநேரம் புதன்கிழமைக் கூட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் மணிவண்ணன் தரப்பு பங்கேற்றது என்றபோதும், தாம் 8 கட்சிக் கூட்டில் இருக்கின்றனரா இல்லையா என்பதைத் தமது செயலாளர் நாயகத்துடன் பேசிய பின்னரே தெரிவிக்க முடியும் என்று செய்தியாளர்களிடம் கூறிவிட்டு நழுவியது. செயலாளர் நாயகம் லண்டனிலோ ஆபிரிக்காவிலோ இல்லை. அவர் சில செக்கன்களில் அழைப்பெடுக்கக்கூடிய வகையில் கொழும்பில்தான் இருக்கிறார். ஆனாலும், கூட்டில் தமது பேரங்கள் படியாத காரணத்தால் அதில் இருப்பதா இல்லையா என்பதை அவர்கள் இன்னும் அறிவிக்கவில்லை.

மாநகர சபையில் தமக்கு அதிக ஆசன ஒதுக்கீடு மற்றும் மேயர் பதவிக்கான உறுதிமொழி ஆகியவற்றை தந்தால் மட்டுமே இந்தக் கூட்டில் இடம்பெறலாம் என்பது மணிவண்ணன் தரப்பின் முடிவு. தமிழ் மக்கள் கூட்டணியில் மணிவண்ணன் தரப்பைவிட்டால் விக்னேஸ்வரன் ஐயாவுக்கும் வேறு ஆட்கள் இல்லை என்பதால் இந்த விடயத்தில் மணிவண்ணனின் முடிவுகளை ஒட்டியே அந்தக் கட்சி நகரும் என்று அறிய முடிகின்றது. ஆனால், மணிக்கு மேயர் பதவியை வழங்குவதற்கான உறுதிமொழியை முன்கூட்டியே வழங்க ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் தயாராக இல்லை. அப்படி வழங்குவதாக இருந்தால் அவர்கள் தமது கூட்டணியில் பங்காளிகளாகி அதற்கான உடன்படிக்கையைச் செய்துகொள்ளவேண்டும் என்று ரெலோ தரப்பில் வலியுறுத்தப்படுகின்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் கஜேந்திரகுமாருடன் இருந்துவிட்டு, பின்னர் தமிழ் அரசின் ஆதரவுடன் மேயர் பதவியைப் பிடித்ததைப் போன்று, தம்மைப் பயன்படுத்தி வெற்றியைப் பெற்றுவிட்டுப் பின்னர் தமிழ் அரசுடன் சேர்ந்துகொண்டு அவர் ஆட்சியைப் பிடிக்கத் தயங்கமாட்டார் என்று கூட்டணியினர் கருதுவதால் அத்தகைய ஒரு நிலை தமக்கு ஏற்படாத வகையில் அவரைக் கிடுக்கிப் பிடிக்குள் வைத்துக்கொண்டே அவருக்கு இடம் வழங்கப்படவேண்டும் என்பது அவர்களின் விடாப்பிடி நிலைமையாக இருக்கின்றது.

இதற்கிடையில் இந்தக் கூட்டணிக்குள் உள்ள ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூட்டணியினருடன் கலந்தாலோசிக்காமலேயே அநுர அரசின் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்திருப்பது கூட்டணிக்குள் புதுக் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த ஆளும்தரப்பின் நடவடிக்கைகளை விமர்சித்து கூட்டணியின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அறிக்கைகள் விட்டுக்கொண்டிருக்கும் நிலையில், செல்வமோ ஆளும் தரப்புக்கு ஆதரவான நிலையை எடுத்திருக்கிறார்.

இது குறித்து புதன் கிழமைக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்கள் சுரேஸ் பிரேமச்சந்திரனிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு, அவர் ஆதரித்தது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று சமாளிக்கப் பார்த்தார் சுரேஸ். உடனேயே இல்லை, அவர் ஆதரித்துத்தான் இருக்கிறார் என்கிற உண்மையை சந்திரகுமார் அங்கு பகிரங்கமாகவே தெரிவித்தார். அதன் பிறகு, அப்படியானால் அது அவரது தனிப்பட்ட முடிவே தவிர, அது கூட்டணியின் முடிவல்ல என்றார் சுரேஸ். அவர் இப்படி இங்கு கூறிக்கொண்டிருக்க, வடக்குக்கு அநுர அரசு அதிக நிதியை ஒதுக்கியதால் தான் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்தார் என்று செல்வம் அங்கு தனியாக ஒரு செய்தியாளர் மாநாட்டில் சொல்லிக்கொண்டிருந்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இருந்தபோது, ஆளும்தரப்பினருடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்பதற்காகவே சுமந்திரனைத் துரோகி என்றவர்கள், இப்போது தமது கூட்டணிக்குள் தம்மோடு கலந்துபேசாமல் தமது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பகிரங்கமாக ஆளும்தரப்புக்கு ஆதரவாகச் செயற்படுவதை கேள்வி கேட்க முடியாது, ஒ-டுங்கிப் போய் இருக்கிறார்கள் மற்றைய கட்சியினர். அதற்குக் காரணம், கூட்டணிக்குள் நாடாளுமன்ற உறுப்பினரைக் கொண்டுள்ள ஒரே கட்சி ரெலோதான். மற்றையவர்களுக்கு மக்கள் ஆதரவு இல்லை என்பதும், இவர்களின் ஆட்டம் எல்லாம் யாழ்ப்பாணத்திற்குள் மட்டும்தான் என்பதுமே ரெலோவின் கணிப்பு என்பதால் இவர்களைக் கேட்டெல்லாம் எதுவும் செய்யவேண்டியதில்லை என்பதுதான் அதனுடைய திமிர். அதற்கெதிராக எதுவும் செய்யமுடியாத கையறு நிலையில் மற்றைய தலைவர்கள் மௌனிகளாக இருக்க வேண்டியிருக்கின்றது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பார்கள். அவர்கள் சுமந்திரனுக்குச் செய்த வினைப்பயன் இவையெல்லாம். அனுபவித்துத்தானே ஆகவேண்டும்.

இதற்கிடையில் ஈபிஆர்எல்எவ், ரெலோ, புளொட்டுடன் உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டு ஏதும் வைத்துக்கொள்ளப் போவதில்லை, தமிழ் அரசு தனித்தே போட்டியிடும் என்ற அறிவிப்பை அதன் தலைவர் சிவஞானம் ஓரிரு தினங்களில் அறிவிப்பார் என்று தெரிகின்றது. கூட்டுக்காகத்தான் எடுத்த முயற்சிகள் மற்றைய கட்சிகளால் உதாசீனப்படுத்தப்பட்ட நிலையில் தேர்தலைத் தனித்தே எதிர்கொள்வது என்றும் தேர்தலின் பின்னர் தேவை ஏற்பட்டால் ஆட்சி அமைப்பதற்கு பரஸ்பரம் ஆதரவளிப்பது குறித்துச் சிந்திக்கலாம் என்றும் அவர் அறிவிப்பார் என்று தெரிகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் தற்போது நடைபெறுகின்றது. வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவுக்குச் சென்று பல விடயங்களைக் கூறியுள்ளார். ஆனால், பொறுப்புக்கூறல் விடயத்தில் கடந்த காலங்களில் செய்த விடயங்களை விட புதிய அரசின் புதிய முன்மொழிவுகள் எதனையும் கூறவில்லை. வடக்கு, கிழக்கு மக்கள் பொறுப்புக்கூறல் விடயத்தில் மிகவும் கரிசனையுடன் உள்ளனர். கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

எமது மக்களைக் கொலை செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்கின்றோம். ஆனால், கடந்த காலங்களில் அரசுகள் செய்ததைப் போன்றே தற்போதைய அரசும் செயற்படுகின்றது என்பது தெளிவாக விளங்குகின்றது.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் உள்ளிட்ட பொறிமுறைகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் தற்போது கூறியிருந்தாலும் இவை அனைத்தும் தமிழ் மக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் நிராகரித்த பொறிமுறைகளாகும்.

இதேவேளை, வடக்கு மக்கள் வாக்கு வழங்கியுள்ளனர். உங்களின் தேர்தல் அறிக்கையில் புதிய அரசமைப்பு பற்றி தெளிவாகக் கூறியுள்ளீர்கள். ஆனால், அது தொடர்பில் இன்றுவரையில் ஒரு வார்த்தையேனும் கூறவில்லை. எதிர்க்கட்சித் தலைவரின் பெயரை புதிய அரசமைப்பில் நிரந்தரப் பெயராக உள்ளடக்கவுள்ளதாக சபாநாயகர் கூறியுள்ளார்.

அமைச்சர் சந்திரசேகரிடம் ஒன்றைக் கேட்கின்றேன். வடக்கு மக்கள் புதிய அரசமைப்பில் தமக்கான அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்கின்றனர். அது பற்றி நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்? அதிகாரப் பகிர்வை விடுவோம். புதிய அரசமைப்பு வருமா? வராதா? வந்தால் அதன் உள்ளடக்கம் என்ன?

பொறுப்புக்கூறல் விடயத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான ஒதுக்கீடுகளும் இன்றைய விவாதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையில் பொறுப்புக்கூறல் என்பது மிகவும் பிரதானமான விடயமாகும். ஆனால், வெளிவிவகார அமைச்சர் எந்தச் சாதகமான பதிலையும் வழங்கவில்லை. இதற்கு எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் தக்க பதிலளிப்பார்கள் -என்றார்.

## கைதுசெய்யப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பழிவாங்குவதற்காக அவரது மனைவியின் தாய், தந்தையரைக் கொலை செய்வதற்காக சந்தேகநபர்கள் உளவு பார்த்தார்கள் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## குற்றவியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஜெனிவாவில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தையையும் அவர் கூறவில்லை. மாற்றம் என்று கூறிக்கொண்டு வந்த இந்த அரசும் பழைய எண்ணப்பாடுகளையே கொண்டுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நாடாளுமன்றத்தில் இதே தலைப்பின் கீழ் விவாதத்தில் கலந்துகொண்டிருந்தபோது மனித உரிமைகள் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் மற்றும் அதன் நம்பகத்தன்மை தொடர்பில் குறிப்பிட்டிருந்தேன். அந்த ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் சில உறுப்பினர்கள் வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்திருந்தபோது காணாமல்போனோரின் உறவினர்களையும் சந்தித்ததுடன், கொழும்புக்கு வந்ததும் அது தொடர்பில் அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தனர்.

அந்த அறிக்கையில் இருந்த விடயங்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை. பாதிக்கப்பட்ட தரப்பினர் நட்டஈட்டுக்கு இணக்கம் தெரிவித்திருந்தனர் என்று கூறப்பட்டது. ஆனால், அது தவறான தகவல் ஆகும்.

இதைக் குறிப்பிடுவதற்கான காரணம் ஒன்றுண்டு. பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ந்தும் சந்தேகங்கள் நிலவுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை எடுத்துக்கொண்டால் அங்கு இன்னும் இராணுவ மயமாக்கலாகவே இருக்கின்றது. பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதைப் போன்றே தெரிகின்றது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்குத் தண்டனை இடமாற்றங்கள் இடம்பெறுவதால் அங்கே பகைமை உணர்வு காணப்படுகின்றது. இதனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவை நம்ப வேண்டியுள்ளது. பொலிஸாரின் செயற்பாடுகளில் அவர்கள் தலையிட வேண்டும்.

கடந்த அரசில் எமது அரசியல் கட்சியினர் தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் உத்தரவு கேட்டபோது நீதிவான் அதற்கு மறுப்புத் தெரிவித்தார். எனினும், அந்த எதிர்ப்புப் போராட்டத்தை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற விதப்புரைகளை வழங்கியிருந்தார். இதன்படி நாங்கள் அந்த நடவடிக்கையை கவனமாக முன்னெடுத்தோம். எனினும், பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அந்த இடத்துக்குச் சென்று அங்கிருந்த பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளைக் கைது செய்திருந்தனர். இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 8 முறைப்பாடுகள் செய்யயப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் சம்பவம் இடம்பெற்ற அன்றே செய்யப்பட்டது. அதன் பிரதிநிதி உடனே அங்கே வந்தார். ஆனால், பொலிஸார் அவரையும் அச்சுறுத்தியுள்ளனர். இன்றுவரையில் அது தொடர்பில் எவ்வித விசாரணையும் இடம்பெறவில்லை.

எங்களால் இந்த ஆணைக்குழுவிடம் மட்டுமே செல்ல முடியும். சுதந்திரமாக இந்த ஆணைக்குழுவுக்குச் செயற்படமுடியாவிட்டால் என்ன செய்யலாம்? இந்த ஆணைக்குழுவுக்கு முழுமையான அதிகாரம் உள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாக் கூட்டத்தொடரில் கலந்துகொண்டுள்ளார். அவர் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மற்றும் நல்லிணக்க அலுவலகத்தை வலுப்படுத்துவார் எனக் கூறியுள்ளார். போர்க்களத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால், குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தையையும் அவர் கூறவில்லை. போர் குற்றவியல் தொடர்பான நீதி மிகவும் முக்கியமானது. ஆனால் அதனைத் தவிர அனைத்தையும் வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் பேசியுள்ளார்.

மனிதப்படுகொலைகளைச் செய்தவர்களை சட்டத்தின் முன்கொண்டு வருவதைத் தவிர அனைத்தையும் கூறியுள்ளார். இவர் பலவற்றை மூடி மறைக்கின்றார். இது மிகவும் கவலைக்குரிய விடயமே. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் இதனையே செய்தார். முறைமை மாற்றம் என்று கூறிக்கொண்டு வந்த நீங்களும் முன்னைய அரசுகளின் எண்ணப்பாடுகளையே கொண்டுள்ளீர்கள். ஜனாதிபதி தன் மீதான நம்பகத்தன்மையைப் பாதுகாக்க வேண்டுமாயின் அவர் இதில் தலையிட வேண்டும்.

எவ்வாறாயினும் கடந்த 77 வருடங்களாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம். முன்னைய அரசுகள் வடக்கு மற்றும் கிழக்கு பிரச்சினைகளை எவ்வாறு பார்த்ததோ, தற்போதைய அரசும் அதே பார்வையைக் கொண்டுள்ளது - என்றார்.

## பன்றி வேட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த மேற்படி சிறுமியின் பாட்டி குளியாப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டின்போது பயன்படுத்தப்பட்ட போர் 12 ரக துப்பாக்கி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் அந்தப் பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை ஹெட்டிபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 'நிதி' என்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணைப்பிரிவு 10(6) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தைத் தவிர வேறு எந்த நபரும், இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமல், 'பணம், நிதி அல்லது நிதி என்ற வார்த்தையை தனியாகவோ அல்லது வேறு வார்த்தைகளுடன் இணைத்தோ, அல்லது அவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட எந்தவொரு வார்த்தையையோ, அல்லது அதன் வழித்தோன்றலையோ, அல்லது வேறு மொழியில் சமமான எந்தவொரு வார்த்தையையோ, அந்த நபரின் பெயர் அல்லது விளக்கம் அல்லது வணிகப் பெயரின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தக்கூடாது' என்று அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த விதியை மீறும் எந்தவொரு நபரும் குற்றவாளியாக இருப்பார்கள் என்றும், அதன்படி, இந்தச் சட்டத் தேவையைப் பின்பற்றுமாறு பொதுமக்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள் என்றும் மத்திய வங்கி கூறுகிறது.

## கொழும்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு கட்சியின் செயற்பாட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. போட்டியிட விரும்புகிறவர்கள் தமது முழுப்பெயர், முகவரி, தொலைபேசி எண், வட்டாரம், அரசியற் செயற்பாடுகளிலுள்ள அனுபவம் உள்ளிட்ட விவரங்களைக் கொண்ட சுயவிபர விண்ணப்பத்தை கட்சியின் தலைமைச் செயலகத்திற்கு (செயலாளர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, இல.40, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்) அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பங்கள் யாவும் மார்ச் 3 அல்லது அதற்கு முன்பு கிடைக்கப்பெறத்தக்க வகையில் அனுப்பப்படவேண்டும்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கட்சிச் செயலாளர் சுமந்திரன், "தற்போது நாட்டில் மாற்றம்பெற்றுள்ள அரசியற் கலாசாரத்திற்கீடு கொடுக்கும் விதமாகவும் கொழும்பு வாழ் தமிழ் மக்கள் நீண்ட காலமாக முன்வைத்திருந்த கோரிக்கைக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையிலும் இந்தத் தீர்மானம் கட்சியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது" எனக் கூறினார்.

# பனை வளத்தைப் பாதுகாத்தல் தொடர்பாக யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

(சுபேசன்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை மரங்களைப் பாதுகாத்தல் தொடர்பான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை பிற்பகல் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

மேற்படி கலந்துரையாடலில் பனை அபிவிருத்திச்சபையினுடைய தலைவர் வி.சகாதேவன், மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகனன், உதவி மாவட்ட செயலாளர் செல்வி தர்ஷனி,

பிரதேச செயலாளர்கள், பனை அபிவிருத்திச் சபையின் முகாமையாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பனை மரத்தை எவ்வாறு பாதுகாப்பது, பனை மரத்தை தறிப்பதற்கான அனுமதி தொடர்பான விடயங்கள், பனை மரத்தை தொழில்நுட்ப உதவியோடு பிடுங்கி மாற்று இடத்தில் நாட்டிப் பாதுகாத்தல், வீட்டுத் திட்டப் பயனாளிகள் விடயத்தில் பனை மரத்தினை தறிக்கும் அனுமதியை இலகுபடுத்தி வழங்கல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் - பல தீர்க்கமான முடிவுகளும் எடுக்கப்பட்டிருந்தன.



## 'நௌசாத் நாடாளுமன்றத்தில்' என்னும் நூல் வெளியீட்டு விழா

(தில்சாத் பர்வீஸ்)

'ஏ.எம்.எம்.நௌசாத் நாடாளுமன்றத்தில்' எனும் நூல் வெளியீடு விழா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எம்.எம்.நௌசாத் தலைமையில் புதன்கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் நூல் ஆய்வுரையை வழங்கினார். அத்துடன், நூலின் முதல் பிரதியை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தர் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் அவர்களுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், தென் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தமிழ்த்துறை பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத், மன்னார் மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனிபா, கிழக்கு மாகாண முன்னாள் கல்விப்பணிப்பாளர் மன்சூர், பிரதேச சபை செயலாளர் அல்ஹாஜ் எம்.ஏ.கே. முகம்மட், சம்மாந்துறை பிராந்திய நீர்பாசன பொறியியலாளர் ஆர்.வேல்கஜன், மன்னார் பொது வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம் ஹனீபா, கல்வியியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





## 'கிளீன் சிறிலங்கா' வேலைத் திட்டம் சம்மாந்துறை தொகுதியில் ஆரம்பம்

(பாறுக் ஷிஹான்)

'கிளீன் சிறிலங்கா' வேலைத் திட்டத்தை வினைதிறன் மிக்கதாக சம்மாந்துறை தொகுதியில் செயற்படுத்தும் பொருட்டு புதன்கிழமை சம்மாந்துறை கல்லரிச்சல் பொட்டியர் சந்தியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய அபிவிருத்தி சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக அம்பாறை கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம, அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ கமல் நெத்திமி, சம்மாந்துறை பிராந்திய நீர்பாசன பொறியியலாளர் ஆர்.வேல்கஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் ரிசாத் .எம் .புஹாரி, சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ,கே.முஹம்மட், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி எஸ் ஜெயலத் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், உயர் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

புதன்கிழமை குறிப்பாக சம்மாந்துறை மஸ்ஜிதுல் உம்மாவினை அண்மித்த பிரதேசம், அல் மர்ஜான் பாடசாலை அருகில் போன்ற இடங்களில் கிளீன் சிறி லங்கா நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்றன.







காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# என்னதான் பதில்?

”ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் தற்போது நடைபெறுகின்றது. வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவுக்குச் சென்று பல விடயங்களைக் கூறியுள்ளார். ஆனால், பொறுப்புக்கூறல் விடயத்தில் கடந்த காலங்களில் செய்த விடயங்களை விட புதிய அரசின் புதிய முன்மொழிவுகள் எதனையும் கூறவில்லை. வடக்கு, கிழக்கு மக்கள் பொறுப்புக்கூறல் விடயத்தில் மிகவும் கரிசனையுடன் உள்ளனர். கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

எமதுமக்களைக்கொலைசெய்தவர்கள்தண்டிக்கப்படவேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்கின்றோம். ஆனால், கடந்த கால ஆட்சியாளர்கள்செய்ததைப்போன்றேதற்போதையஆளும்தரப்பும் செயற்படுகின்றது என்பது தெளிவாக விளங்குகின்றது.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் உள்ளிட்ட பொறிமுறைகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் தற்போது கூறியிருந்தாலும் இவை அனைத்தும் தமிழ் மக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் நிராகரித்த பொறிமுறைகளாகும்” என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

இதே கருத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்றஉறுப்பினர்கஜேந்திரகுமாரும்வலியுறுத்தியுள்ளார்.

”அயலுறவுத்துறை அமைச்சர் ஜெனிவாக் கூட்டத்தொடரில் கலந்துகொண்டுள்ளார். அவர் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம்மற்றும்நல்லிணக்கஅலுவலகத்தைவலுப்படுத்துவார் எனக் கூறியுள்ளார். போர்க்களத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால், குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தையையும் அவர் கூறவில்லை. போர் குற்றவியல் தொடர்பான நீதி மிகவும் முக்கியமானது. ஆனால் அதனைத் தவிர அனைத்தையும் வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் பேசியுள்ளார்.

மனிதப் படுகொலைகளைச் செய்தவர்களை சட்டத்தின் முன்கொண்டு வருவதைத் தவிர அனைத்தையும் கூறியுள்ளார். இவர்பலவற்றைமூடிமறைக்கின்றார். இதுமிகவும்கவலைக்குரிய விடயமே. முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரியும் இதனையே செய்தார். முறைமை மாற்றம் என்று கூறிக்கொண்டு வந்த நீங்களும் முன்னைய ஆட்சியாளர்களின் எண்ணப்பாடுகளையே கொண்டுள்ளீர்கள். ஜனாதிபதி தன் மீதான நம்பகத் தன்மையைப் பாதுகாக்க வேண்டுமாயின் அவர் இதில் தலையிட வேண்டும்.

எவ்வாறாயினும் கடந்த 77 வருடங்களாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம். முன்னைய அரசுகள் வடக்கு மற்றும் கிழக்கு பிரச்சினைகளை எவ்வாறு பார்த்ததோ, தற்போதைய அரசும் அதே பார்வையையே கொண்டுள்ளது” என்றார் கஜேந்திரகுமாரும்.

இந்த ஆளும்தரப்பினரிடமிருந்து தமிழ் மக்கள் நீதியையும் எதிர்பார்க்கிறார்கள் என்பதை அவர்களின் உரையில் இருந்து காணமுடிகின்றது. குற்றவியல் நீதியைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்டவர்கள் அனைத்துலக நீதியை வலியுறுத்துகின்றார்கள். ஆனால், தாம் உள்ளக நிதியில் மட்டுமே கரிசனையாக இருக்கிறார்கள் என்பதே ஆளும்தரப்பினரின் நிலைப்பாடு. ஆனால், அதைக்கூட அவர்கள் எப்படிச் செய்யப் போகிறார்கள் என்பதை வெளிப்படுத்தவில்லை என்பதே இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ள விடயம்.

தமிழ்மக்களுக்குஉள்ளகநீதிவழங்கப்படும்என்றால்அதற்கான பொறிமுறை என்ன, அது எப்போது நடைமுறைப்படுத்தப்படும், எந்த வகையில் செயற்படுத்தப்படும் என்பதை ஆளும்தரப்பு பகிரங்கப்படுத்தவேண்டும். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பொறிமுறைகள் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டுவிட்ட நிலையில் புதிதாக எதையாவது வைத்திருக்கிறார்களா என்பதை அறிவதற்கே தமிழ்ச் சமூகம் ஆர்வமாக இருக்கின்றது. இதற்கு தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்களின் பதில் என்ன என்பதே இப்போதுள்ள கேள்வி.

# புலி பசித்தாலும்

**என்.சத்திய மூர்த்தி**

தமிழ் அரசு கட்சியின் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் சிவஞானத்தின் கடிதத்திற்கு பதில் அளிக்கும் முகமாக, கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன், ”பசித்தவன் தானே தனக்கு என்ன உணவு வேண்டும் என்று கேட்கவேண்டும்” என்று கருத்து தெரிவித்திருந்தார். முன்னதாக, தற்போதைய சூழலில், அரசின் முன்னெடுப்புகள் இல்லாமல், தமிழ் கட்சிகள் அரசியல் தீர்வு திட்டம் குறித்து ஒன்றிணைந்து அழுத்தம் கொடுப்பதில் அர்த்தமில்லை என்ற கருத்தை சிவஞானம் தெள்ளத்தெளிவாக, கஜேந்திரகுமாருக்கு அனுப்பியிருந்த பதில் கடிதத்தில் கூறியிருந்தார். அதற்கு, முரணமாகச் சிறீதரன் எதற்கு பதிலளிக்கவேண்டும் என்று தெரியவில்லை.

இவர்கள் இருவரையும் பொறுத்த வரையில், புலி பசித்தாலும் புல்லை தின்னாது. இதில், சிவிகே, கஜேந்திரகுமார் போன்றோர், அஹிம்சையின் வழியில் நின்று, தங்களது கருத்தை முன்வைக்கிறார்கள் என்றே கொள்ளவேண்டும். கடந்த ஒரு வருட அரசியலை வைத்து பார்க்கும்போது, சிறீதரனும் களத்தில் அந்தப் பாதையிலேயே பயணிக்கிறார். ஆனால் அவரது மேனியின் மேல் விடுதலை புலிகள் அமைப்பின் நிழல் எப்போதும் படிந்த வண்ணமே இருக்கிறது என்பதே தந்தை செல்வா-வினால் நிறுவப்பட்ட தமிழ் அரசு கட்சியின் தலைமை பீடத்தின் கருத்தாகத் தொடருகிறது.

### பழைய பல்லவி

இது ஒருபுறமிருக்க, இனப்பிரச்சினையின் சமகால அலகுகளைக் காரணம் காட்டி, ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவின் கன்னி பட்ஜெட்டை எதிர்ப்போம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார். இதன் மூலம். தனது தரப்பிற்கு மட்டுமல்லாது, காணாமல்போன தமிழ் தேசிய கூட்டமைப்பின் மறந்துபட்ட தலைவர் சம்மந்தனின் இடத்தையும் நாடாளுமன்றதத்தில் நிரப்பும் விதமாக அவர் பேசி உள்ளார்.

குறிப்பாக இவர்கள் இருவரும்தான், பட்ஜெட் ஆகட்டும், அல்லது அரசின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகட்டும், அல்லது வேறு ஏதாவது பெரிய பிரச்சினை ஆகட்டும், பாராளுமன்றவிவாதத்தின்போது தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்ற தொனியின் உரையாற்றுவார்கள். இவர்கள் அனைவருக்குமே குறிப்பாக சபையில் பிரசன்னமாகியிருக்கும் வெளிநாட்டு தூதுவர்கள் மத்தியில் தங்களுடைய அசைக்க முடியாத ஆளுமையை நிரூபிப்பதாக நினைத்துப் பேசுபவர்கள். ஆனால். அந்த தூதுவர்களோ அல்லது அவர்களது அலுவலர்களோ, இவர்களுடைய பழைய பல்லவியை பாராமுகமாகவே கேட்டு கொட்டாவி விட்டுக்கொண்டிருப்பார்கள். அல்லது, வெளியே சென்று ஒரு கோப்பை கோப்பி அல்லது தேனீர் சுவைத்துவிட்டு வருவார்கள்.

அவர்களைப் பொறுத்தவரையில், தேதி, நேரம் தவிர்த்து அனைத்துமே முன் எப்போதோ கேட்ட குரல்தான்.

### உள்குத்து வேலை

தற்போது விடயம் அதுவல்ல. கஜேந்திரகுமார் பட்ஜெட்டிற்கு எதிராக வாக்களிக்கப் போகிறார் என்று அறிவித்துள்ளபோது, அவருடைய அண்மைகால சகாவான ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அதனை ஆதரித்து வாக்களித்தார். மலையக தமிழ் கூட்டணியில் அங்கம் வகிக்கும் திகாம்பரம் மற்றும் ராதகிருஷ்ணன் ஆகிய இருவரும் வாக்களிப்பில் பங்களிக்கவில்லை. இதுவே முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினரான ஹிஸ்புல்லாவிற்கும் பொருந்தும்.

இதனை அவரவருடைய காரணங்கள் அவரவர்களுக்கு என்று விட்டுவிட முடியாது. இலங்கைத் தமிழ் கட்சியினரிடையே, இனப்பிரச்சினை அடிப்படையில் ஒருங்கிணைந்து செயல்படப்போகிறார்கள் எனவும், அதனையே அடிப்படையாக வைத்து சேர்ந்து அரசியல் செய்யப்போகிறார்கள் எனவும் கஜேந்திரகுமாரும் செல்வமும் காட்டி வந்த அண்மை கால ’படம்’ என்னவாயிற்று?

இந்தப்பின்னணியில்தான், கஜேந்திரகுமார் தமிழ் அரசு கட்சிக்கு எழுதிய கடிதத்தையும், அதற்கான சிவஞானத்தின் பதிலையும் காண வேண்டும். கஜேந்திரகுமார் பிற தமிழ் அரசியல் தலைமைகளையும் ஒரு சேர அணுகி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதில் தமிழ் அரசு கட்சி, அரசியல் தீர்வு குறித்து அரசு தயாராகும்போது மட்டுமே தாங்கள் அது குறித்துவிரமாகவிவாதிக்கவேண்டும்என்று சிவஞானம் மூலம் பதில் அளித்துள்ளது.

ரெலோவின் செல்வம், தனியாவர்த்தனம் வாசிக்கிறார். அல்லது குறுக்குசால் ஓட்டுகிறார். இரண்டில் எது அவரது தற்போதைய அரசியல் நிலைப்பாட்டை விவரிக்கும் என்பதும் கூட அவருக்கே வெளிச்சம். அந்த வகையில், கடந்த காலத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் நெருக்கத்தில் இருந்தார் எனவும் சமூக வலைதளங்களில் தொடர்ந்து செய்தி வெளியாகியது.

குறிப்பாக, தானும் சேர்ந்து ஜனாதிபதி தேர்தலில் முன்னிறுத்திய பொது வேட்பாளரை எதிர்த்தே செல்வம் உள்ளிட்ட தமிழ் தலைவர்கள் பலரும் உள்குத்து வேலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அது போன்றே, கூட்டமைப்பின் காலத்தில் ஜனாதிபதி ரணிலின் தேர்வில், ஆறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அணி மாறி வாக்களித்தார்கள் என்று பொதுவெளியில் பாடப்பட்டதையும் மறந்துவிடமுடியாது. அதற்கான பண பயனை அவர்கள் அடைந்தார்கள் என்றும் சொல்லப்பட்டது.

### கானல் நீர்

தமிழ் அரசு கட்சியின் உள்விவகாரங்கள் ஆகட்டும், அல்லது அனைத்து தமிழ் கட்சிகளிடையேயான ஒற்றுமை ஆகட்டும், அனைத்துமே, நாடாளுமன்ற தேர்தல் முடிவில் அவர்கள் எங்கு விட்டார்களோ அங்கேயே சென்று சேர்ந்துவிட்டது. அல்லது, அங்கிருந்து புறப்பட்டுப் பயணித்ததாக யாராவது கருதி இருந்தால், அந்த எண்ணம் வெறும் கானல் நீர் மட்டுமே என்பது மீண்டும் உண்மையாகி உள்ளது.

இதிலிருந்து மூன்று கேள்விகள்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

## புலி பசித்தாலும் ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

எழுகின்றன. ஒன்று, எதிர்வரும் உள்ளாட்சி தேர்தல்களை இவர்கள் எல்லோரும் எப்படி சந்திக்கப் போகிறார்கள்? இரண்டு, அந்த தேர்தலுக்கு பின்னரான ஐக்கியம் குறித்த நிலைபாடு. மூன்றாவதாக, அரசு புதிய அரசமைப்புக் குறித்து முன்னெடுப்புகளை எடுத்தால், அவர்கள் அப்போது என்ன செய்யப் போகிறார்கள்?

முதல் விடயத்தில், தமிழ் அரசின் சிவஞானம் பேசியபோதும் அமுக்காகமாகவே இருந்த சுரேஸ், சித்தார்த்தன், செல்வம் போன்றோர், அடுத்த நாளே, தாங்கள் 'சங்கு' சின்னத்தில் மீண்டும் ஒரு சேர களமிறங்கப் போகிறார்கள் என்று அறிவித்தது சிறிது அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் அளித்தது. ஜனாதிபதி தேர்தலில் இவர்களின் பொது வேட்பாளர் அரியநேத்திரன் சங்கு சின்னத்தில் போட்டியிட்டதும், அதுவே நாடாளுமன்றத் தேர்தலிலும் அந்த அணியினரின் சின்னமானதும் குறிப்பிடத்தக்கது.

தாங்கள் ஏற்கனவே, உள்ளாட்சித் தேர்தலில் ஒன்றிணைந்துபோட்டியிட முடிவுசெய்துவிட்டதாக செல்வம், சிவஞானத்திடம் கூறினாரா, என்று சமூக வலைதள ஆர்வலர்கள்; சிலர் கேள்வி எழுப்பினார்கள். அதற்கான தெளிவான பதில் இரு தரப்பினரிடம் இருந்தும் வரவில்லை. அதற்கான காரணமும் தெரியவில்லை.

தற்போது இரண்டாவது சுற்றுப் பேச்சு நடத்திய மறக்கடிக்கப்பட்ட ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்குள்ளும் குழப்பம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. அந்தக் குழப்பங்கள் மாறி, அந்த கட்சியினர் அனைவரும் ஒரு சேர போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் இன்னமும் உள்ளன. என்ன, நாடாளுமன்றத் தேர்தலில், மற்றவர்களால் ஏமாற்றப்பட்ட மூத்த அறிவுஜீவியான ஸ்ரீகாந்தாவும் இவர்களுடன் இன்னமும் தொற்றிக் கொண்டிருப்பதுதான் மீண்டும் உரசுகிறது.

### தமிழ் அரசின் கடமை

உள்ளாட்சி தேர்தலில் தனித்து போட்டி என்ற தமிழ் அரசின் முடிவு, தற்போதைய பொது செயலாளர் சுமந்திரன் முன்னரே எடுத்த முடிவிற்கு, கட்சியின் மத்திய குழு 'ஓ' போட்டதற்கு சமம். நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர், கள நிலையும், கட்சி எதிர்நோக்கி இருக்கும் சவால்களும் பரதூரமானவை என்பது சிறுபிள்ளைக்குகூடத் தெரியும்.

குறிப்பாக, வட மாகாண தமிழ் வாக்குகளை குறிவைத்து ஆளும் தரப்பு அரசு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் காய் நகர்த்துவது, தமிழ் அரசையே குறிவைத்து தாக்குவதற்காக மட்டுமே. ஜனாதிபதி அனுரவின் ஜேவிபி - -என்பிபி கூட்டணியைப் பொறுத்தவரை, மற்ற தமிழ்க் கட்சிகளை தேர்தலில் குறிவைப்பதற்கு அவர்களிடம் அரசியல் ரீதியாகவோ, தேர்தல் ரீதியாகவோ எதுவும் மிச்சம் இல்லை என்ற எண்ணமே நிலவுகிறது.

அவ்வாறானால், தமிழர் தரப்பின் மானத்தை உள்ளாட்சி தேர்தலில் காப்பாற்ற வேண்டிய கடமை இன்னமும் தமிழ் அரசு கட்சித் தலைமைக்கு உள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் கட்சி பெற்ற எட்டு ஆசனங்களில் பெரும்பான்மையான ஐந்து இடங்கள் கிழக்கு மாகாணத்தின் தயவில் வென்றெடுக்கப்பட்டவை.

வடக்கில் உள்ள மொத்தம் பன்னிரெண்டு ஆசனங்களில் கட்சி இரண்டை மட்டுமே வெல்ல முடிந்தது. இது தவிர, தமிழர் தரப்பிற்கு, யாழ்பாண தேர்தல் மாவட்டத்தில் இரண்டு, வன்னியில் ஒன்று என்று மேலும் மூன்று ஆசனங்களே கிடைத்தன. இதில் யாழ்பாணத்தில் உள்ள இரண்டில் ஒரு ஆசனம், சுயேச்சையாக போட்டியிட்ட மருத்துவர் அருச்சுனாவினுடையது. இன்று அவரை சீண்டுவார் இல்லை. அவரைச் சீண்டிப் பிழைத்தவர் இல்லவே இல்லை.

பிற தமிழ் கட்சிகளுடன் கூட்டணி இல்லாமல், தமிழ் அரசு வடக்கு மாகாணத்தில் மட்டுமாவது எவ்வாறு உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற போகிறது என்று சிவஞானம் மற்றும் சுமந்திரன் உள்ளிட்டோர் யோசித்து பார்த்தார்களா என்று தெரியவில்லை. முன்பு சுமந்திரன் கூறிய தனித்தனியான போட்டி என்பது, கூட்டமைப்பு இருந்த காலகட்டத்திற்கு மட்டுமே பொருத்தமாய் இருந்திருக்கலாம். ஆனால், எப்போது கூட்டமைப்பு உடைந்து விட்டதோ, அப்போதே, தமிழ் அரசு உள்ளிட்ட அங்கத்துவ கட்சிகளின் பலம் சிதைந்துவிட்டது. அரசியல் ரீதியாக சாதிக்க முடியாததை, தனி தலைவர்களின் ஈகோ சாதித்துக் காட்டியது. அந்த ஈகோ-வே இன்னமும் தமிழர் அரசியைல பிடித்து ஆட்டுகிறது.

கூட்டமைப்பு இந்த தலைவர்கள் மற்றும் அவர்களது கட்சிகள் அனைத்திற்கும் அரசியல் மற்றும் தேர்தல் அரணாக இருந்தது. அவர்களுடைய உயர்ச்சியை உயர்த்தி காட்டியும், தாழ்மையை மூடிமறைத்தும் அது செயல்பட்டது.

இப்போது கூட்டமைப்பு இல்லாத காரணத்தினாலும் அவர்கள் அனைவருமே தேர்தல் அரசியலில் தங்களது நிர்வாணத்தை மறைத்துக் கொள்ள முடியாமல் நிற்கிறார்கள். இதற்கு, தமிழ் அரசு கட்சியும் விலக்கல்ல.

இதைவிட நகைப்பிற்குரிய ஒரு விடயம் இங்குள்ளது. தமிழ் அரசு கட்சியின் 'வீடு' சின்னமாகட்டும், அல்லது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் 'சங்கு' சின்னமாகட்டும், உள்ளுராட்சி தேர்தலில் அதனை அனைத்து வேட்பாளர்கள் குழுக்களும் பயன்படுத்த அங்கீகரிக்க வேண்டிய தலைவர்கள் தாங்கள் அந்த சின்னங்களில் போட்டியிட்டு தோல்வியுற்றதை என்னென்று சொல்ல?

தமிழ் அரசின் பொது செயலாளர் சுமந்திரனும், ஜனநாயக கூட்டணியின் சின்னத்தை தன் பெயரில் பதிவு செய்துள்ள புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகட்டும், இருவருமே, அண்மையில் நடந்தேறிய நாடாளுமன்ற தேர்தலில் தங்களுடைய ஆசனங்களையே தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் பிறருக்கு இந்த சின்னங்களை விநியோகம் செய்ய இருக்கிறார்கள்.

இந்த அவலத்தையும் எங்கே போய் சொல்ல!



காலைக்கதிர் Kalaikkathir

# கடலில் மிதந்து வந்த பெரும் நீர்த் தாங்கி

(இல்சாத் பர்வீஸ்)

அம்பாறைமாவட்டம்,நிந்தவூர்பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரைப்பகுதியில்பாரிய தண்ணீர்த் தாங்கியொன்று புதன்கிழமை மாலை கரையொதுங்கியுள்ளது.

கடலில் நிலவும் கடும் காற்றால் குறித்த பாரிய தண்ணீர் தாங்கி கரையொதுங்கி இருக்கலாமெனத் தெரிவிக்கப்படும் அதேவேளை, அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பாரிய தண்ணீர்த்தாங்கி இரும்பு உலோகத்தில் செய்யப்பட்டு அதன் மேல் பைரினால் வார்க்கப்பட்டு இளம் பச்சைக் வர்ண கூம்பக வடிவில் அடைக்கப்பட்டதாக இப்பொருள் பெரியளவில் காணப்படுகின்றது.

இப்பொருளின் மேற்பகுதியில் ரயர்கள் காணப்படுகின்றன இது பெரியகப்பல்களின் ஒரு பாகமாக இருக்கலாம் என அப்பகுதி மீனவர்கள் தெரிவிப்பதோடு, இவ்வாறு மர்மப்பொருள் கரையொதுங்கியுள்ளமை தொடர்பில்கடற்படைக்குதாம்அறிவித்துள் ளதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடந்த சில வாரங்களாக கிழக்கு மாகாண கடற்கரைப்பகுதிகளில் மர்மமான பொருள்கள் மற்றும் ஆளில்லாத படகுகள், டொல்பின்கள் போன்றவை கரையொதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கரையொதுங்கிய மிதவையை இராணுவம், கடற்படை, பொதுமக்கள் எனப் பலர் பார்வையிட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக கடற்படையினரும் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மீன் வியாபாரிகளுக்கு தராசுகள் வழங்கும் நிகழ்வு கிண்ணியாவில்

(ஹலால்தீன்)

கிண்ணியா மீன் வியாபாரிகளுக்கு தராசுகள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் கிழக்கு மாகாண சபைத் தவிசாளர் எம்.எச்.எம் பாயிஸ் தலைமையின் கீழ் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கிண்ணியா நகர சபை செயலாளர் எம்.கே.எம்.அனீஸ், மீன் வியாபாரிகளின் சங்கத்தின் செயலாளர் எம்.கே.எம்.ஜப்பார், மீன் வியாபாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னாள் கிழக்கு மாகாண சபைத் தவிசாளர் எம்.எச்.எம் பாயிஸ்,சுமார் 250 இற்கு மேற்பட்ட மீன் வியாபாரிகளுக்கு தராசுகள் வழங்கப்பட்டன.





# கண்டல்குளியிலிருந்து 6 கழுதைகள் கடத்தல்

(சியாஜ்)

கற்பிட்டி கண்டல்குளி பகுதியிருந்து அனுமதி பத்திரம் இன்றி ஆறு கழுதைகளை ஏற்றிச் சென்ற படி கெண்டர் சாரதிகள் இருவர் புதன்கிழமை நுரைச்சோலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டக்குளி பகுதியில் உள்ள கழுதைகளை கற்பிட்டி பிரதேச செயலாளரின் அனுமதி பத்திரமின்றி வேறு பகுதிக்குக் கொண்டு செல்வது சட்டவிரோதமானது எனத் தெரிவித்துள்ள பொலிஸார்,

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணை களின் போது, இந்த கழுதைகள் படல்கம பிரதேசத்தில் உள்ள தென்னந் தோட்டங்களுக்கு கொண்டு செல்வதாக தெரிவித்துள்ளனர்.

நுரைச்சோலை பொலிஸாரின் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளத்தில் விம்பிள்டன் கழகம் வெற்றி

(சியாஜ்)

புத்தளம் காற்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் லெஜண்ட்ஸ் கழகத்தின் அனுசரணையில் புத்தளத்தில் நடத்தப்பட்டு வந்த 'புத்தளம் காற்பந்தாட்ட லீக் தலைவர் எம்.எஸ்.எம்.ரபீக் வெற்றிக்கிண்ண' தொடரில் புத்தளம் நகரின் மிகவும் பழைமை வாய்ந்த அணியாக திகழும் விம்பிள்டன் கழகம் சம்பியனாக மகுடம் சூடியது.

லீக் தலைவர் எம்.எஸ்.எம்.ரபீக், லெஜன்ட்ஸ் கழகத்தின் ஸ்தாபக தலைவர் முஹம்மது யமீன் ஆகியோரது விரிவான ஏற்பாட்டில் இத்தொடரனது கடந்த மூன்று வாரங்களாக புத்தளம் மாவட்ட



விளையாட்டரங்கில் நடைபெற்று வந்தது.

புத்தளம் லீக்கில் அங்கம் வகிக்கும் 12 கழகங்கள் பங்கு பற்றிய இத்தொடரில் புத்தளம் விம்பிள்டன் கழகமும், நியூ ஸ்டார்ஸ் கழகமும் இந்த இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை நடத்தின.

இந்த பரபரப்பான இறுதிப்போட்டி புதன்கிழமை மாலை புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

போட்டி ஆரம்பித்து 02 ஆவது நிமிடத்தில் விம்பிள்டன் அணி வீரர் முஹம்மது நிப்லான் தனது அணிக்கான கோலினை செலுத்த, 14 ஆவது நிமிடத்தில் அதே அணியின் முஹம்மது ஹம்தான் இரண்டாவது கோலினையும் செலுத்தினார்.

போட்டியின் இரண்டாம் பாதியில் நியூ ஸ்டார் அணிக்கு கிடைக்கப்பெற்ற பெனால்டி உதையை அவ்வணியின் தலைவர் அவ்ஸாப் கோலாக மாற்றி நியூஸ்டார் அணிக்கு ஒரு கோலை பெற்றுக்கொடுத்தார்.

நிர்ணயிக்கப்பட்ட ஆட்ட நேர முடிவில் 02 : 01 என்ற கோல் கணக்கில் விம்பிள்டன் அணி வெற்றி பெற்று சம்பியனாகியதோடு நியூஸ்டார்ஸ் அணி ரண்னரப்பாக தெரிவானது.

விம்பிள்டன் அணியை அந்த அணியின் முன்னாள் வீரர் சட்டத்தரணி ஏ.டபில்யூ அஷ்ரக் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றி வழி நடத்தி இருந்தார்.

தொடரின் சிறந்த கோல் காப்பாளராக விம்பிள்டன் அணியின் கோல் காப்பாளர் முஹம்மது இம்ரான் தெரிவுசெய்யப்பட்டார்.

இதேவேளை நியூஸ்டார்ஸ் அணியினருக்கு லெஜன்ட்ஸ் கழகத்தின் ஸ்தாபக தலைவர் முஹம்மது யமீன் மேலங்கி தொகுதியையும் கையளித்தார்.




காலைக்கதிர்
Kalaikkathir

# சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு தலைவராக சட்டத்தரணி முஸ்தபா தெரிவு

(பாறுக் ஷிஹான்)



சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு புதிய தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸ்தபா மீண்டும் எவ்வித போட்டிகளுமின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் நடப்பாண்டிற்கான பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது மீண்டும் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸ்தபா தெரிவானார். மேலும் சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய செயலாளராக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.வை. அன்வர் ஸியாத்தும் பொருளாளராக சட்டத்தரணி எம்.எம்.ஃப். ஷாமிலாவும் உபதலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.நஸீலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸ்தபா கிழக்கின் பல்வேறு நீதிமன்றங்களுக்கு சென்று வாதாடும் திறமை கொண்டவர்என்பதுடன்கடந்தகாலங்களிலும் சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகவும், பிராந்திய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டு சட்டத்தரணிகளின்நலன்சார்விடயங்களிலும், சம்மாந்துறை நீதிமன்றம் உருவாகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# செயலமர்வு



(சியாஜ்)

மூதூர்குடிசார்ஒன்றியதின்துணைக்குழுக்களுக்கானசெயலமர்வு மூதூர் கலாசார மண்டபத்தில் எம்.சீ.எப் இன் அழைப்பாளர் மொஹமட் புஹாரி தலைமையில் நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலக பிரிவில் காணப்படும் குறைப்பாடுகள் தொடர்பில் உருவாக்கப்பட்ட துணைக் குழுக்களுடனான கலந்துரையாடல் மற்றும் திட்டமிடல் என்பன தொடர்பாக நெறிப்படுத்தப்பட்டது. அத்தோடு ஒன்பது துணைக்குழுக்கள் தமது அறிக்கைகளையும் சமர்ப்பித்ததுடன்

எதிர்கால செயற்பாடுகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

மேற்படி செயலமர்வின் விரிவுரையாளராக வலயக் கல்வி பணிப்பாளர் ஜவாத் ( நளிமி) கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா அல் ஜெஷீராஹ் அரபுக் கல்லூரி ஹாபிழாக்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு

(ஹலால்தீன்)

கிண்ணியா அல் ஜெஸீராஹ் மகளிர் அரபுக் கல்லூரியில் ஹிப்ள் படிப்பினை நிறைவு செய்த மாணவிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) அல் ஜெஸீராஹ் மகளிர் அரபுக் கல்லூரியின் வளாகத்தில் நடைபெற்றது.

அல் ஜெஸீராஹ் அரபுக் கல்லூரியின் முதல்வர் ஏ.ஆர்.நஸார் பலாஹி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஹொரவப்பொத்தானை சல்மா மகளிர் கலாசாலையின் பிரதி அதிபர் அஷ்ஷேஹ் தாஹிர் தஸ்லீம் மற்றும் அமானா வங்கி கிண்ணியா கிளையின் முகாமையாளர் இம்ரான் வதுர்தீன் மற்றும் திணைக்கள தலைவர்கள், உலமாக்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.











# புத்தளம் றத்மல்யாய அஹதிய்யாவின் வருட பூர்த்தியும் கலை நிகழ்நிகழ்வும்

(சியாஜ்)

புத்தளம் றத்மல்யாய அல் ஹாஸிமி அஹதிய்யா பாடசாலையின் இரண்டாவது வருட நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற மாணவர்களின்

இஸ்லாமிய கலைநிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் புதன்கிழமை அல் ஹாஸிமி அஹதிய்யாவின் தலைவர் அல் ஹாபிழ் அஷ்ஷெய்க் ஏ.ஜீ.எம்.அஸீம் தலைமையில் அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.எச்.ஏ.ஹாதி மற்றும் நிர்வாகக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக தொழிலதிபரும் சிட்டி கிளாஸ் சென்டர் முகாமையாளருமான என்.எம்.ஸியாதின் துணைவியார் திருமதி ஸியாத், கௌரவ அதிதிகளாக அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய சம்மேளன தேசிய பிரதித் தலைவர் பாரூக்பதீன் (ஆசிரியர்), றிஸாத் பதியுதீன் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஏ.எம்.பௌஸீன் , அல் ஹாஸிம் சிட்டி ஜும்ஆப் மஸ்ஜிதின் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஜெஸ்மி, நூராணியா ஜும்ஆ மஸ்ஜிதின் தலைவர் ஏ.ஆர்.றஸ்மின், மஸ்ஜிதுஸ்

ஸலாம் தலைவர் கே.எம்.கே.ஸுபைர் ஆகியோரும் சிறப்பதிதிகளாக முன்னாள் அதிபர் எம்.எம்.நஜ்மி அஸ் ஸபா நிறுவன தலைவி

ஸிபானி ஸஜாத், மௌலவியா அன்வரா றிபாய், அஷ்ஷெய்க் எஸ்.எம்.றகீப், எச்.என்.ஹன்ஸாத், ஸுஜானா, ஏ.எஸ். ஏ.

றிஸான்,ஏ.சீ.எம்.சவ்பான் ஆகியோரும் கலந்துசிறப்பித்தனர்.

மேலும் முன்னாள் அதிபர்கள்,ஆசிரியர்கள் பெற்றோர்கள்,மாணவர்கள்,நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டதாக அல்ஹாஸிமி அஹதிய்யா பாடசாலையின் ஊடகப் பொறுப்பாளரும், பொருளாளருமான திருமதி

ஷிபானி ஸஜாத் தெரிவித்தார்.







## வெளிநாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உள்ளிட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் செலவினத் தலைப்புகள் மீதான விவாதத்தின் போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015- - 2019 க்கு இடையில் வெளிநாட்டு பயணங்களுக்காக ரூ. 380 மில்லியனுக்கு அதிகமாகவும், முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச 2020- 2022 க்கு இடையில் ரூ.120 மில்லியனுக்கும் அதிகமாகவும் செலவிட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023- - 2024 காலப் பகுதியில் ரூ. 530 மில்லியனுக்கும் அதிகமாகச் செலவிட்டார் எனவும், அவரது முப்பத்து மூன்று பயணங்களில் 154 பேர் சேர்ந்து பயணித்துள்ளனர் என்றும் பிரதமர் கூறினார்.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க செப்டம்பர் 2024 முதல் பிப்ரவரி 2025 வரையில் வெளிநாட்டுப் பயணங்களுக்காக 1.8 மில்லியன் ரூபாயை மட்டுமே செலவிட்டார் எனவும் அவர் கூறினார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## உத்தரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உளவுத்துறை தகவல்கள் கிடைத்தும் ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் தொடர்பான வழக்கு விசாரணையின்போது இந்த உத்தரவு வழங்கப்பட்டது. வழக்கு விசாரணையின் ஒரு பகுதியாக இழப்பீடு வழங்குவதை கண்காணிப்பது தொடர்பாக ஆராயப்பட்டபோது நீதியரசர்கள் இந்த உத்தரவைப் பிறப்பித்தனர்.

உச்ச நீதிமன்ற உத்தரவுகளின்படி ரூ. 311 மில்லியன் இழப்பீடு வழங்கப்பட்டிருப்பதாக தலைமைக் கணக்குத் தணிக்கைத் தலைவர் அலுவலகம் அறிக்கையிட்டுள்ளது என்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார். இதனை அடுத்தே, இழப்பீடு வழங்கப்பட்டவர்களின் விவரங்களை கர்தினாலிடம் வழங்கும்படி நிதியரசர்கள் உத்தரவிட்டனர்.

## துன்புறுத்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தின் தலைமை உள்ளக கணக்காய்வாளர் தினேஷ் விதானா தலைமை தாங்குவார். சிந்தா புலசிங்கலா மற்றும் பி.ஜி.பி. பிரியங்கரா ஆகியோர் அதன் ஏனைய உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற தகவல் அமைப்புகள் மற்றும் முகாமைத்துவத்துறையின் சில அதிகாரிகளால் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளானதாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன. சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோரிடம் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட முறையில் புகார் அளித்ததைத் தொடர்ந்து விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

## பயங்கரவாத ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் விடயதானத்துக்குப் பொறுப்பற்ற வகையில் பேசுகின்றார்கள். விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கின்றார்கள். இருப்பினும் ஒருசிலர் பொறுப்புடன் செயற்படுவது வரவேற்கத்தக்கது

தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாங்கள் மறக்கவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று அன்றும் குறிப்பிட்டோம். இன்றும் குறிப்பிடுகின்றோம். அதேபோல் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக கொண்டு வந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கும் நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் ஆகியவற்றை மீளாய்வு செய்வதற்காக நீதியரசர் (ஓய்வுநிலை) ஹர்ஷ குலரத்ன தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த நடவடிக்கைகள் அடுத்த தேர்தல் வரை இழுத்துச் செல்லப்படமாட்டாது.

பூகோள பயங்கரவாதம் மற்றும் பூகோள நவீன சவால்கள் ஆகியவற்றை எதிர்கொள்ளும் வகையில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சட்டம் விரைவில் இயற்றப்படும். உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் கோட்பாடுகளுக்கு அமைவாகவே புதிய சட்டம் இயற்றப்படும். ஆகவே, இந்தச் சட்டம் இயற்றப்பட்டவுடன் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும். இந்த விடயத்தில் எவரும் அச்சம் கொள்ள வேண்டாம். பொலிஸ்மா அதிபருக்கும் பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் இடையில் முரண்பாடு, சட்டமா அதிபருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாடு என்று எதிர்க் கட்சிகள் இன்றும் வங்குரோத்து அரசியலில் ஈடுபடுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், பிரதமர் ஹரிணி அமர சூரியவுக்கும் கடும் போட்டி நிலவுவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், அது இன்று பொய்யாக்கப்பட்டுள்ளது.' - என்றார்




காலைக்கதிர்
Kalaikkathir

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# வாழை இலையில் சாப்பிடுவோம்

சைவத் தமிழர்களின் வாழ்வியலுடன் நெருக்கமாகமாக இணைந்திருப்பது புனிதம் நிறைந்த வாழையிலை.

தெய்வீகத் தாவரமாகக் கருதப்படும் வாழை மனிதனுக்குப் பல்வேறு பயன்களைத் தந்து நிற்கின்றது.

அது தரும் பழம் சுவையாக இருப்பதுடன் மேலான மருத்துவக் குணம் கொண்டும் இருக்கின்றது.'வாழைப் பூ' பல மருத்துவக் குணங்கள் கொண்டது.

அதன் நடுபகுதித் தண்டுச் சாறு சிறுநீரகக் கற்களைக் கரைத்தும் உருவாகாது தடுத்தும் நலம் பெற உதவுகின்றது.

சமூகத்தில் நடைபெறும் மங்கல அமங்கல மற்றும் தெய்வீக நிகழ்வுகளுக்கு வாழை மரத்தைக் கட்டி அடையாள படுத்திக் கொள்வார்கள்.

வாழை மரத்தின் தோல் அதாவது காய்ந்த தடல் மற்றும் இலை உணவு உண்பதற்குப் பயன் படுகின்றது. விரத காலங்களில் சைவத் தமிழர்கள் வாழையிலையில் உண்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

வாழை இலையில் உணவு உண்பதால் கிடைக்கும் பயன்கள் ஏராளம்.

வாழை இலையில் உண்பதால் மனிதருடைய தோல் மிருதுவாக பளபளப்பாக தோற்றம் தரும் என்று அறியப்பட்டுள்ளது.மேலும் மனிதரிடத்துத் தோன்றும் மந்தம் தொடர்பான நோய்கள்,வலிமைக் குறைவு,இளைப்புப் போன்றன வாழையிலையில் உணவு உண்பதால் நீங்கும். அத்துடன் நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும்.

சைவத் தமிழர் வாழ்வில் நடைபெறும் விருந்துகள், விழாக்கள்,மற்றும் வைபவங்கள் ஆகியவற்றில் எல்லாம் வாழையிலையில் உணவு பரிமாறப்படுவது மரபு.அதனை மற்றவர்க்கு அளிக்கும் மரியாதையின் வெளிப்பாடாகவும் நம் முன்னோர் எமக்கு வழிகாட்டியுள்ளனர்.இவ்வாறு வாழையிலையில் விருந்தோம்பல் சைவத் தமிழரின் பாரம்பரிய கலாசாரமாகும்.

வாழையிலையின் மேலுள்ள பச்சைத் தன்மை (குளோரோபில்) உணவை எளிதில் ஜீரணமடைய வைப்பதுடன் பசியைத் தூண்டும் என்றும் வயிற்றுப் புண் தோன்றின் குணமடைய வைக்கும் என்றும் ரத்தத்தை சுத்தீகரிக்கும் என்றும் மனிதர்களுக்கு ஆரோக்கிய வாழ்வளித்து நீண்ட ஆயுளைக் கொடுக்கும் என்றும் கூறுகின்றார்கள்.

வாழையிலையில் சூடான உணவுகளை இட்டு



உண்ணும்போது,இலையில் உள்ள முக்கிய ஊட்டச் சத்துக்கள் உணவுடன் கலந்து பயன்தருகின்றன.இதன்போது இளநரை மறைந்து கருமுடி வளர வாய்ப்புக் கிட்டுகின்றது.

வாழையிலையில் உண்பதால் ஏற்படும் மேற்குறிபிட்ட நல்ல அம்சங்களுடன் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியது, வாழை இலை இயற்கை எமக்களித்த பெரும் கொடை. அங்கே இரசாயனக் கலப்புக்கு இடமில்லை.உடலுக்குத் தீங்கில்லை.

மாறாக நாம் தினசரி பயன்படுத்தும் பிளாஸ்டிக்,பீங்கான் வகைகளை கலந்துள்ள இரசாயன சேர்க்கைகளை நினைவில் கொள்ளுங்கள்.

வாழையிலையில் பாதுகாப்பாக வைக்கப்படும் பூக்கள்,கீரை வகைகள்,காய்கறிகள் பழங்கள் போன்றனவிரைவில்வாடாதிருப்பதை அவதானித்துக் கொள்ளலாம்.

வாழையிலையைப் பாவித்தலில் உயர்சுகாதாரம் பேணப்படுவதுடன், பாவித்தபின் அவைவிலங்குணவாகவோ அல்லது பசளையாகவோ மீளுருவாக்கம் பெற்றுபயன்தரவல்லதுஎன்பதையும் நினைவிற் கொள்வோம்.

எனவே வாழையிலையில் உண்போம்.பயன் பல பெறுவோம்.



**வாழையிலை போடும் முறை.**

கடவுளர்க்குப் படைக்கும் போது: சிறிய கோலமிட்டு அதன்மீது வாழையிலையை வைத்துப் படைக்க வேண்டும்.அப்போது இலையின்காம்புப்பகுதிகடவுளையும் நுனிப் பகுதி எம்மையும் நோக்கி இருக்கலாம்,அல்லது வாழையிலை மரத்தில் இருந்து நறுக்கப்பட்ட பகுதி கடவுளர்க்குவலதுபக்கம்வரவேண்டும் என்று கூறுகின்றார்கள்.

மனிதர்கள் உண்ணும் போது:தலைவாழையிலையாயின் வலது கைப்பக்கம் அகலமான பகுதியும் இடது கைப்பக்கம் இலையின் நுனிப் பகுதியும் இருத்தல் வேண்டும.

அரை வாழையிலையாயின் அதன் முற்றிய பகுதியான தண்டுடன் உள்ளது உணவு உண்பவர் பக்கமும் மற்றைய மெல்லிய பகுதி பரிமாறுபவர் பக்கமும் இருத்தல் வேண்டும்.

விரைவான நகரமயமாதலும் பழக்க வழக்க மாற்றங்களும் நம் முன்னோர் எமக்களித்த பயனுள்ள பாரம்பரிய நடைமுறைகளை மறைத்து மறக்க வைத்துள்ளமை பெரும் பின்னடைவே.

அவற்றில் ஒன்று வாழையிலையில் உணவு உட்கொள்வது. சிந்தித்துச் செயற்படுவோம்.

**ஷிவன்யா**
**அவுஸ்திரேலியா**



# புதிய உதவி தேர்தல்கள் ஆணையாளர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்

(ஹஸ்பர்)

புதிய உதவி தேர்தல்கள் ஆணையாளர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.



திருகோணமலை மாவட்டத்தின் புதிய உதவி தேர்தல்கள் ஆணையாளராக எஸ். கே.டி.நிரஞ்சன் அவர்கள் திருகோணமலை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) தனது கடமைகளைபொறுப்பேற்றுக் கொண்டார்.

திருகோணமலை மாவட்டத்தை பிறப்பிடமாக கொண்ட இவர் சிங்கள மத்தியமகாவித்தியாலயத்தில் உயர்தரம் வரை கல்வி கற்று, பின்னர் தனது முகாமைத்துவ பட்டத்தை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பெற்றிருந்தார்.

நிர்வாகஉத்தியோகத்தராக இவர் கிண்ணியா பிரதேச செயலகம் மற்றும் திருகோணமலை மாவட்ட செயலகத்தில்கடமையாற்றிஉள்ளார். அதனையடுத்து



மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பரீட்சையிலே சித்தியடைந்து தெரிவு செய்யப்பட்ட இவர் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் உதவி செயலாளராக கடமையாற்றிய சந்தர்ப்பத்தில் இந்நியமனம் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# விசேட தேவையுடையோரை கௌரவிக்கும் நிகழ்வு


(கேதீஸ்)

நுவரெலியாமாவட்ட விசேட தேவையுடையோர் அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் நானுஓயா டெஸ்போர்ட் தமிழ் மகா வித்தியாலயத்தில் சாதனையாளர்களைக் கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள் நாடாளுமன்ற உறுப்பினர்சங்கத்தின்தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான சுகத் டி சில்வா, திட்ட ஆலோசனையாளர் எஸ்.தர்மேந்திரராஜ், நுவரெலியா மாவட்ட சமூக சேவை அதிகாரி திரு.பிரியந்த டி சில்வா, அபிவிருத்தி அதிகாரி ஜனக மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.










காலைக்கதிர் Kalaikkathir

# வெள்ளப் பெருக்கு கடலரிப்பால் சேதமடைந்த சிறுவர் பூங்கா புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(ஹலால்தீன்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ள பெருக்கு மற்றும் கடல் அரிப்பால் சேதமடைந்த கிண்ணியா சிறுவர் பூங்காவின் பாதுகாப்பு சுவர்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் திருகோணாமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய முதற்கட்டமாக ரூபா 20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் புனர்நிர்மான பணிகள் தொடர்பாக ஆராய புதன்கிழமை கிண்ணியா நகர சபை செயலாளருடன் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு இருந்தார்.

இதன் போது சேதமடைந்த பாதுகாப்பு சுவர்களையும் உடன் அமைக்கப்பட வேண்டிய இடங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்.










## மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தி.

# முப்பெரும் விழா

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தின் முப்பெரும் விழா நிகழ்வுகள் பாடசாலை அதிபர் எம்.ஐ. அஸ்மி தலைமையில் புதன்கிழமை பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் அவர்கள் கலந்து சிறப்பித்தார். மேலும் ஓய்வு பெற்ற அதிபர் சட்டத்தரணி ஏ. ஆதம்பாவா, கல்முனை வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கான கற்றல் வள நிலையம் (நூலகம்) மற்றும் 2024 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு, அண்மையில் ஆசிரிய சேவையில் இருந்து இளைப்பாறிய எஸ்.எம்.ஸஹாபி மற்றும் திருமதி சபீனா ஆகியவர்களுக்கு சேவை நலன் பாராட்டு விழா என்பன இதன்போது இடம்பெற்றன.



மாணவர்களுக்கான நினைவுச் சின்னங்களையும், பரிசில்களையும் நூலகத்திற்கான 32'அங்குல எல்.சி.டி. தொலைக்காட்சியையும் சாய்ந்தமருது சிங்க ஷோ ரூம் நிறுவன உரிமையாளர் எஸ்.எச்.எம். ஜிப்ரி அன்பளிப்பாக வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## ஆளும்தரப்பின் கன்னி பட்ஜெட்டுக்கு ஐக்கிய மக்கள் காங்கிரஸ் வரவேற்பு

(நூருல் ஹுதா உமர்)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவு திட்டத்தை ஐக்கிய மக்கள் காங்கிரஸ் வரவேற்றுள்ளது. இது தொடர்பாக கட்சியின் செயலாளர் நாயகம் ஏ.சி. யஹ்யாகான் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில், அரசியல் எதிர்காலம் இல்லை என்று உணர்ந்துள்ள எதிர்க்கட்சியில் உள்ள சிறுபான்மை கட்சிகள் பட்ஜெட்டை எதிர்க்கின்றன. சூனியமாகிப் போயுள்ள தமது அரசியல் எதிர்காலத்தை மீண்டும் நிலை நிறுத்த இந்த சிறுபான்மை கட்சிகள் திட்டமிட்டு மக்கள் மத்தியில் பட்ஜெட்டுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. மக்கள் இன்று இந்த சிறுபான்மை கட்சிகளை வெறுக்க ஆரம்பித்துள்ளனர். இதை கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் அவதானிக்க முடிந்தது.

மக்கள் மிகத் தெளிவாக இருக்கின்றனர். மக்கள் பட்ஜெட்டை ஆதரிக்கின்றனர், வரவேற்கின்றனர். சிறுபான்மை கட்சிகளின் கருத்துக்களை மக்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். இதேவேளை சிறுபான்மை கட்சி ஒன்றின் தலைவர் சிலரை கூலிக்கமர்த்தி எமது கட்சியையும் அரசாங்கத்தையும் விமர்சித்து வருகின்றார். போலியான முகநூல் கணக்குகளை உருவாக்கி இதை மேற்கொண்டு வருகிறார். அதனைப் பற்றி எவரும் அலட்டிக் கொள்ளவில்லை. அலட்டிக் கொள்ளப் போவதுமில்லை என்றும் யஹ்யாகான் தெரிவித்துள்ளார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.02.2025இல் வெளியிடப்பெற்றது